## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No.167 /2021 P.W. 1 / LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **புனிதா** | **Caste** | : | |
| **Husband Name** | : | கரிகாலன் | **Calling** | : | |
| **Village** | : | வடுவூர் சாத்தனூர். | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20 .06.2024**

**(1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது).** .

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**1)** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை எனக்கு தெரியும். 2 வது எதிரியையும் எனக்கு தெரியும். கடந்த 06.04.2021 ஆம் தேதியன்று 2021 சட்டமன்ற தேர்தலில் தன்னார்வளராக பணிசெய்வதற்கு செருமங்கலம் , கிராமம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு சென்று அங்கு முகக்கவசம் கொடுக்கும் பணிசெய்தேன். அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கு பணி முடிந்து நானும் என்னுடன் பணி செய்த கனிமொழி என்பவரும் ஸ்கூட்டி வாகனத்தில் எங்கள் ஊருக்கு செல்வதற்கு வந்து கொண்டிருந்தோம்.

2) பின்னர் வேலை முடிந்தவுடனேயே எனது கணவருக்கு போன்செய்து வரச்சொன்னதன் பேரில் அவரும் வந்து எங்களுடன் அவர் தனியான வாகனத்திலும், நாங்கள் தனியான வாகனத்திலும் வந்து கொண்டிருந்தோம். அப்போது வரும் வழியில் உள்ள உடையார் தெருவில் எனது கணவர் அங்கு நின்று கொண்டிருந்த ராஜேந்திரன், த/பெ. கலியபெருமாள் மற்றொரு ராஜேந்திரன் ஆகியோருடன் பேசுவதற்காக ஒதுங்கினார். நாங்களும் அந்த இடத்தில் வந்து வண்டியை திருப்ப முயற்சி செய்தபோது பல்சர் வாகனத்தில் வந்த எதிரிகள் என் கழுத்தில் கிடந்த தங்கச்சங்கிலியை பறித்துக்கொண்டு சென்று விட்டார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். எனது கணவர் பார்த்து விட்டு உடனே வருவதற்குள் எதிரிகள் தப்பிச்சென்று விட்டார்கள்.

3) பின்னர் வடுவூர் காவல்நிலையத்திற்கு உடனடியாக போன் செய்து தகவல் சொல்லி சம்பந்தப்பட்ட எதிரிகளின் வண்டியின் அடையாளங்களை சொன்னோம். அதை

வைத்து காவல்துறையினரும் எதிரிகளை பிடித்து விட்டார்கள். நாங்கள் காவல்நிலையம் சென்று எதிரிகளை நான் அடையாளம் காட்டினேன். அன்று எனக்கு பதட்டமாக இருந்ததால் மறு நாள் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் மனு அரசுத்தரப்பில் குறியீடு செய்ய வேண்டப்படுகிறது. ( **மேற்படி புகார் மனு அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

1) நான் கீழே விழுந்தது சம்பந்தமாக மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் வடுவூரில் உள்ள சரவணன் என்ற மருத்துவரிடம் வெளிநோயாளியாக பார்த்துவிட்டு சென்று விட்டேன். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். மன்னார்குடி - வடுவூர் சாலை கிழக்கு மேற்கான சாலை என்றால் சரிதான். சம்பவ நேரம் இருட்டு நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை நான் பார்த்தேன். ஒருவர் ெ உறல்மட் போட்டிருந்தார். நான் காவல்நிலையத்தில் வைத்துதான் முதன் முதலில் எதிரிகளை பார்த்தேனா என்றால் இல்லை சம்பவத்தின்போதே பார்த்துவிட்டேன்.

2) நான் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே எதிரிகளை காவல்துறையினர் பிடித்து காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள். காவல்துறையினர் எதிரிகளை பிடித்து வந்து அவர்கள் மீது பொய்யான வழக்கை பதிவு செய்தார்கள் என்றாலும், அரசுத்தரப்பிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ சமயத்தில் வழக்கின் எதிரிகள் சம்பவத்தில் இல்லை என்றாலும், தற்போது உண்மை நிலையை மறைத்து எதிரிகளை நேரிட்டு பார்த்ததுபோன்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

ஒம்/-மு.முருகேசன்,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No.167 /2021 P.W. 2 / LW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கரிகாலன் | **Caste** | : | |
| **Fatehr's Name** | : | முருகையன் | **Calling** | : | |
| **Village** | : | வடுவூர் சாத்தனுார். | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20 .06.2024**

**(1வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது).**.

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கில் சம்பவ சமயத்தில் 2 பேர் வந்தார்கள். சட்டமன்ற தேர்தல் நடந்து முடிந்த 4 ஆம் தேதி சம்பவம் நடந்தது. மாதம், வருடம் ஞாபகம் இல்லை. நான் என் மனைவி வேலை முடித்து அழைத்து வருவதற்காக சென்றுவிட்டு அவர்கள் வேறு வண்டியில் முன்பாகவும், நான் அவர்களை தொடர்ந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தோம், காரக்கோட்டை , உடையார் தெரு என்ற இடத்தில் எனது மனைவி நின்று போன் பேசினார். நான் அதற்கு எதிர்திசையில் நின்று கொண்டிருந்தேன்.

2) அப்போது பைக்கில் வேகமாக வந்த நபர்கள் எனது மனைவியையும், அவருடன் வந்த கனிமொழியையும் அடித்து தாக்கிவிட்டு எனது மனைவி கழுத்தில் கிடந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். நான் ரோட்டை கிராஸ் செய்வதற்குள் அவர்கள் ஓடி விட்டார்கள். பின்னர் அந்த இடத்தில் நின்ற பசங்க வடுவூர் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னார்கள். கூட்டம் கூடி விட்டது. நாங்கள் செல்வதற்குள் வடுவூர் காவல்துறையினர் எதிரிகளை பிடித்து விட்டார்கள். பிடித்து விட்டு எங்களுக்கு தகவல் சொன்னவுடன் நாங்கள் காவல்நிலையம் சென்றோம். நாங்கள் நடந்ததை சொன்னோம். அவர்கள் எழுதி வாங்கிக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதன் முதலில் வடுவூர் காவல்நிலையம் சென்றபோது 6 ஆம் தேதி சுமார் 9.30, 10.00 மணி இருக்கும் . நான் வடுவூர் காவல்நிலையம் சென்றவுடன் காவல்துறையினர் நான் சொல்ல , சொல்ல எழுதிக்கொண்டார்கள். அதில் என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். சம்பவ இடம் ஒரே கூட்டமான இடம் என்றால் சம்பவத்திற்கு பிறகு கூட்டம் கூடியது. பைக்கில் சென்று கொண்டிருந்தபோதுதான் சம்பவம் என்று சொல்லியுள்ளேனா என்றால் நின்று கொண்டிருந்தபோதுதான் சம்பவம் என்று சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திலிருந்து எனது வீடு 10 கி.மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 8,9 எனக்கு பரிட்சையான நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றும் , காவல்துறையினர் உதவ வேண்டும் என்பதற்காக இந்த எதிரியை வழக்குச்சம்பவத்துடன் தொடர்பு படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

ஒம்/-மு.முருகேசன்,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No.167 /2021 P.W. 3 / LW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ராஜேந்திரன் | **Caste** | : | |
| **Fatehr's Name** | : | கலியபெருமாள் | **Calling** | : | |
| **Village** | : | செருமங்கலம் , உடையார் தெரு | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 57 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20 .06.2024**

**(1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது). .**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். 06.04.2021 ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் முடிந்து நான் , கருப்பையா மகன் ராஜேந்திரன் மற்றும் கரிகாலன் ஆகியோர் செருமங்கலம் உடையார் தெருவின் சாலையோரம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு எதிர்திசையில் நின்ற கரிகாலன் மனைவி கீழே விழுந்துவிட்டார், அதை நாங்கள் பார்த்து சாலையை கடந்து போய் தூக்கியசமயத்தில் ஆஜர் எதிரியும் அவருடன் வந்த எதிரியும் பைக்கை எடுத்துக்கொண்டு வேகமாக சென்று விட்டார்கள். நாங்கள் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னோம். பின்னர் காவல்துறையினர் எதிரிகளை பிடித்து விட்டார்கள். காவல்நிலையத்தில் தகவல் சொன்னதற்கு பிறகு நாங்கள் போய் பார்த்தோம். அதன்பிறகு புனிதாவிடம் புகார் வாங்கிவழக்கு பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது வீடு மதியழகன் வீட்டுக்கு கீழ்பக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டுக்கும், ரோட்டிற்கும் 30, 40 அடிக்கு மேல் இருக்கும். என் வீட்டுக்கு நேர் எதிர்த்தாற்போல் பஸ்ஸ்டாப் உள்ளது. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். அசா 2 எனது நண்பர் ஆவார்.

சம்பவ நேரம் இருட்டு நேரம் என்றால் சரிதான். சத்தம் கேட்டு போய் பார்த்தேன். அந்த பொண்ணு விழுந்து விட்டது. ஆஜர் எதிரியை அந்த சமயத்தில் நன்றாக அடையாளம் தெரிந்தது. மற்றொருவரை அடையாளம் சரியாக தெரியவில்லை. காவல்நிலையம் சென்றபோது எங்கள் ஊரில் இருந்து 7,8 நபர்கள் சென்றோம். சம்பவத்திற்கும் இந்த எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 06.04.2021 ஆம் தேதி காவல்நிலையத்தில் இந்த எதிரிகளை எங்களிடம் காண்பித்தார்கள். காவல்நிலையத்தில் எதிரிகளை எங்களிடம் காண்பித்ததன்பேரில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நேரில் பார்த்தேன். அசா 1 மற்றும் அசா 2 எனக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

ஒம்/-மு.முருகேசன்,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,MANNARGUDI**

**C.C.No.167 /2021 P.W. 4 / LW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ராஜேந்திரன் | **Caste** | : | |
| **Fatehr's Name** | : | கருப்பையா | **Calling** | : | |
| **Village** | : | செருமங்கலம் , உடையார் தெரு | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 54 |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20 .06.2024**

**(1 வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டது). .**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியும், மற்றொரு பையனும் சம்பவத்தில் உள்ளவர்கள் . 06.04.2021 ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் முடிந்து நான் ,கலியபெருமாள் மகன் ராஜேந்திரன் மற்றும் கரிகாலன் ஆகியோர் செருமங்கலம் உடையார் தெருவின் சாலையோரம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது சாலையை கடப்பதற்காக கரிகாலன் மனைவி நின்று கொண்டிருந்தபோது பைக்கில் வந்த ஆஜர் எதிரியும், மற்றொரு எதிரியும் பைக்கில் வந்து அவருடைய தாலிச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடி விட்டார்கள். என்னுடன் நின்று கொண்டிருந்த கலியபெருமாள் மகன் ராஜேந்திரன் காவல்நிலையத்திற்கு தகவல்சொன்னார். பின்னர் காவல்துறையினர் எதிரிகளை சாத்தனூர் சாலைக்கு அருகில் வைத்து மடக்கி பிடித்து விட்டார்கள். காவல்நிலையத்தில் தகவல் சொன்னதற்கு பிறகு நாங்கள் போய் பார்த்தோம். அதன்பிறகு புனிதாவிடம் புகார் வாங்கிவழக்கு பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைதான்போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால்சரிதான். 06.04.2021 ஆம் தேதி சுமார் 9.15 , 9.30 மணிக்கு இந்த எதிரிகளை வடுவூர் காவல்துறையினர் பிடித்து விட்டார்கள்.

காவல்நிலையத்தில் வைத்துதான் எதிரிகளை பார்த்தேனா என்றால் சம்பவ சமயத்திலேயே பார்த்துவிட்டோம். எனது வீடு உடையார் தெரு, மெயின்ரோட்டில் உள்ளது. சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு சுமார் 500 மீட்டர் அப்பால் உள்ளது. அசா2 எனக்கு பரிட்சையான நபர் என்றால் சரிதான். அசா 2 எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதற்காக நான் இந்த எதிரிகளை இந்த வழக்குடன் தொடர்புபடுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

ஒம்/-மு.முருகேசன்,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.